பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

NEW MASTER INSTITUTE
B. M. C. Lane,
JAFFNA.
A/L 91
(Week end Classes)
பிரிவு I க்கான
வகுப்புகள்
நடைபெறுகின்றன.
7.30 - ZOOLOGY
8:30 - BOTANY
10.30 - CHEMISTRY
11.30 - PHYSICS
7.30 - PURE&APPLIED

# உதயன்

விலை ரூ2/50

NEW MASTER INSTITUTE
B. M. C. Lane,
JAFFNA.
91 A/L
Week End Classes
பிரிவு II
ஆரம்பமாகி விட்டது
7.30 - BOTANY
8 30 - ZOOLOGY
9.30 - CHEMISTRY
10.30 - PHYSICS
7.30 - PURE&APPLIED

கடர்: 4 சுக்கில ஆடு [ஆடி மீ 25] புதன்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 6 (09 - 08 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 212

## இந்திய யோசனைகள்

# இலங்கைக்கு இசைவாக இல்லை!

### அரசியல் வட்டாரங்களில் அதிருப்தி

கொழும்பு, ஆகஸ்ட் 9

இலங்கை - இந்திய ஒப்பந்த அமுல் சம்பந்தமாக, புதுடில்லிப்பேச்சுக்களின் விளைவாக, இந்தியா சமர்ப்பித்த புதிய யோசனைகள், இலங்கையின் நோக்கத்திற்கு இசைவாக இல்லை. இவ்வாறு கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் நேற்று அதிருப்தி வெளியிட்டன.

இந்தியாவின் புதிய யோசனைகளை வெளியுறவு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தின நேற்று நாடாளுமன்றத்தில் அறிக்கை மூலமாக வெளியிட்டார்.

அந்த அறிக்கையின் பிரகாரம், அமைதிப்படை விலகல், யுத்தநிறுத்தம் ஆகிய இரண்டு அம்சங்களிலும் இலங்கையின் நோக்கங்களை அடைவதற்கு உதவுவதாக இந்திய யோசனைகள் அமையவில்லை என்று இங்கு அரசாங்க அரசியல் வட்டாரங்கள் அதிருப்தி வெளியிட்டன.

அமைதிப்படை விலகல், யுத்த நிறுத்தம், ஒப்பந்த அமுல், வடக்குக் கிழக்கில் பாதுகாப்பு ஆகியநான்கு அம்சங்கள் குறித்து இலங்கை இந்தியத்தரப்புகளில் முன் வைக்கப்பட்ட யோசனைகளையும்-

அவற்றில் இணக்கம்காணப்பட்ட சில விடயங்களையும்- திரு. விஜேரத்தினதமதுஅறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் சமர்ப்பித்த அறிக்கை விவரம் வருமாறு:-

இலங்கையில் எஞ்சியுள்ள அமைதிப்படையினர் வருகிற செப்டம்பர் மாத நடுப்பகுதியில் முற்றாகத் திருப்பி அழைக்கப்பட வேண்டும் என்று இந்தியாவிடம் இலங்கைக் குழு தெரிவித்துள்ளது.

நடைமுறைக் கஷ்டங்கள் காரணமாக: இந்தக் கால எல்லைக்குப் பின்னரும் இந்தியப் படையின் ஒரு பகுதி இலங்கையில் தங்கியிருக்க நேருமானால், அவை முகாம்களுக்குள்ளேயே இருக்க வேண்டும் என்று இலங்கைக் குழு இந்தியாவிடம் கோரியது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றில் நாளையும் விவாதம் தொடரும்

கொழும்பு, ஆகஸ்ட் 9

புதுடில்லிப் பேச்சுக்கள் பற்றி வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கை மீதான விவாதம் நாளை வியாழன் வரை நடைபெறும்.

விவாத முடிவில் அறிக்கையை வாக்கெடுப்புக்கு விடுவதில்லை என்று அரசு தீர்மானித்துள்ளது.

இதனிடையில்—

இரண்டு அரசுகளின் நிலைப்பாடுகள் பற்றிய அறிக்கைகளை நன்கு ஆராய்ந்து கொண்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள விசேட அமைச்சரவைக் கூட்டத்திற்கு வரும்படி ஜனாதிபதி பிரேமதாஸா சகல மைச்சர்களையும் கேட்டிருக்கிறார்.

## வல்வை மக்களுக்கு சர்வோதய நிவாரணம்

பருத்தித்துறை, ஆக. 9

வல்வெட்டித்துறைப் பகுதியில் அண்மையில் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு சர்வோதயம் நிவாரணம் வழங்கி வருகிறது.

ஆதிகோவிலடி, உதயசூரியன் திருவில், வித்தனை, ரேவடி, வேம்படி, தெணியம்மை ஆகிய பகுதிகளில் முற்றாகப் பாதிக்கப்பட்ட மூவாயிரம் குடும்பங்களுக்கு அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா, உப்பு, தேயிலை, தேங்காய், மெழுகுதிரி, தீப்பெட்டி ஆகிய பொருட்களை சர்வோதயம் உடன் நிவாரணமாக வழங்கியுள்ளது.

சர்வோதயத்தின் புனர்வாழ்வுப் பகுதி பணிப்பாளர் திரு. ஜெகா செந்தில்நாதன்,

(6ஆம் பக்கம் பார்க்க)

## இணைப்பாளர் இராஜினாமா!

கொழும்பு: ஆக 9

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் மகாவலி சேவைஇணைப்பாளராகப்பணி புரிந்து வந்த திரு.இ.எஸ்.ரி: பெர்னாண்டோ நேற்று முன்னம் தனது ராஜினாமாவைச் சமர்ப்பித்து விட்டார்:

இவர் கூட்டுத்தாபனத்தில் செய்திப்பிரிவு பிரதிப் பணிப்பாளர் நாயகமாக முன்னர் கடமையாற்றினார்: (உ-எ)

## பாடசாலை பகிஷ்கரிப்பு; கண்டித்து அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக.9

வடக்கு, கிழக்கு மாகாணப் பாடசாலைகளைப் பகிஷ்கரிப்பதைக் கண்டித்து ஜனநாயக மாணவர் அமைப்பு என்ற பெயரில் அறிக்கை ஒன்று நேற்று வெளியிடப்பட்டது:

அந்த அறிக்கையின் முக்கிய அம்சம் வருமாறு!

1970ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்ட ரீதியில் தமிழ் மாணவர்கள் உயர்கல்வி பயில்வதை மட்டுப்படுத்தும் நோக்குடன் அமுல்படுத்திய தரப்படுத்தலை தொடர்ந்து தமிழ்பேசும் மாணவர்களின் போராட்டங்கள் பல்வேறு வடிவங்கள் ஊடாக உத்வேகம் அடைந்தது. அத்தகைய ஒருமித்த ஐக்கியப்பட்ட போராட்டங்களை நடத்திய மாணவர்கள் இன்று எந்த வித நோக்கமும் இன்றி அர்த்தம்அற்ற முறையில் வழி நடாத்தப்படுவதால் மாணவர் சமுதாயத்திற்கு எந்தவித பயனும் இல்லை என்பதோடு எமது கல்வியும் பாழடிக்கப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வீரசிங்கம் மண்டபத்தை திருத்த ரூ.1கோடி 14 லட்சம்

கடந்தகால அசம்பாவிதங்களின்போது சேதமடைந்த வீரசிங்கம் மண்டபத்தைப் புனரமைக்க ஒரு கோடி 14 லட்சம் ரூபாவை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கவிருக்கிறது.

கூட்டுறவு அமைப்புக்களின் முக்கிய கேந்திர நிலையமாக விளங்கிய யாழ் வீரசிங்கம் மண்டபம் முற்றாக சேதமடைந்து மூடப்பட்ட நிலையில் பல காலமாகக் கிடக்கிறது: (உ-3)

முச்சந்தி முரளி



என்னத்தைச் சொன்னாலும் உலை உலக வங்கிக்காரர் எங்கடை பெண்டுகளிட்டைத் தான் சீட்டுப் பிடிக்கிறது பற்றி படிக்கவேணும் கண்டியளோ......!

## உலக வங்கி அறிக்கையில் "சீட்டுப் பிடிக்கும்" முறை

கொழும்பு, ஆகஸ்ட் 9

1989 ஆம் ஆண்டுக்கான உலக அபிவிருத்தி பற்றிய உலக வங்கியின் அறிக்கையில் இலங்கையில் பரவலாக உத்தியோகப்பற்றற்ற முறையில் இயங்கும் 'சீட்டுப் பிடிக்கும்' முறை பற்றி பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது:

சுழற்சி முறையிலான சேமிப்பு மற்றும் கடன் வழங்கும் சங்கம் என்ற தலைப்பில், குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் மக்கள் கஷ்டகாலத்திலும் கூட 'சீட்டு' முறை மூலம் பணம் சேமிப்பதிலும் தொழிலுக்கு மூலதனம் போடுவதிலும் ஈடுபட்டு வருகிறார்கள் என்று உலக வங்கி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இந்தியா ஆகிய நாடுகளில் இம்முறை 'சீட்டு' என்று அழைக்கப்படுகிறது.

## எரிபொருளுடன் ரயில் வந்தது

யாழ்ப்பாணம், ஆக. 9

கொழும்பில் இருந்து எரிபொருள்களை ஏற்றிக்கொண்டு சரக்கு ரயில் ஒன்று நேற்றுப் பகல் யாழ்ப்பாணம் வந்தது.

இவ் ரயிலில் 90ஆயிரம் லீட்டர் மண்ணெண்ணெய், 26ஆயிரம் லீட்டர் பெற்றோல், 25 ஆயிரம் லீட்டர் ஹெவிஒயில், 5 ஆயிரம் லீட்டர் டீசல் ஆகியன கொண்டுவரப்பட்டன. [ -3]

## நல்லூர் ஆலயப் பகுதிக்கு 24மணி நேரமும் மின்சாரம்

யாழ்ப்பாணம், ஆக. 9

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தையொட்டி நல்லூர் ஆலய சுற்றுடல் பகுதிக்கு 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படுவதாக மின்சார சபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதே வேளை யாழ்ப்பாணம் தெல்லிப்பழை, காங்கேசன்துறை ஆஸ்பத்திரிகளுக்கும் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து 24 மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படுகிறது.

யாழ். வைத்தியசாலையில் இருந்த ஜெனரேட்டர்களில் ஒன்று தற்போது மந்திகை வைத்தியசாலையில் பொருத்தப்பட்டுள்ளது என்றும்—

இதனையடுத்து அந்த வைத்தியசாலைக்கு நேற்றுமுதல் மின்சாரம் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்:

கிளிநொச்சி வைத்தியசாலைக்கும் ஜெனரேட்டர் ஒன்றைப் பெற்றுக்கொடுக்க முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

வட பகுதிக்கான நீர் மின் விநியோகம்எப்போது கிடைக்கும் என்பது உறுதியாகத் தெரியவில்லை என்றும்—

எனினும் விரைவில் மின் விநியோகத்தைப் பெறுவதற்கு மின்சாரசபை தொடர்ந்து முயன்று வருவதாகவும் அவ்வதிகாரி சொன்னார். (உ-3)

## 2 நிபந்தனைகளை முன்வைத்து மு. காங்கிரஸ் பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஆகஸ்ட் 9

நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் வரை வடக்கு - கிழக்கு மாகாணசபைக் கூட்டங்களை பகிஷ்கரிக்கப் போவதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்திருக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஜனாப். எம். ஐ. உதுமான் அக்கரைப்பற்றில் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு எதிர்புத் தெரிவிக்குமுகமாக நேற்று முன்தினம் நடந்த சபையின் வரவு செலவுத் திட்டக் கூட்டத்தை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் பகிஷ்கரித்தனர்.

கொலைக்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படும் வரையும்—

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நட்ட ஈடு வழங்கும் வரையும் பகிஷ்கரிப்புத் தொடரும் என்று தற்போது

(6-ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

[9 - 8 - 1989]

ஆடி 24 — புதன்கிழமை

நக்ஷத்திரம்: சித்திரை

சுபநேரம்:

4-34 முதல் 6-04 வரை

ராகுகாலம்:

12-04 முதல் 1-34 வரை

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூஜை

## மதனராஜன் காலமானார்

யாழ்ப்பாணம், ஆக 9

உதயன் காரியாலயத்தில் பணிபுரிந்த திரு. நாகராசா மதனராஜன் காலமானார் என்ற செய்தியை வருத்தத்துடன் அறியத் தருகிறோம்.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக பத்திரிகை விநியோகப் பகுதியில் பணிபுரிந்த மதனராஜன், அரவம் தீண்டி நேற்றுக் காலை அகால மரணமாகிவிட்டார்.

இருபத்திரண்டு வயது இளைஞராக இருந்த போதிலும் தமக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை கடமை உணர்வுடன் நிறைவேற்றும் இயல்புடையவராக அவர் விளங்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வன்செயல்களை நிறுத்துமாறு

# கூட்டாக பகிரங்க அழைப்பு

### விடுக்குமாறு சர்வ கட்சிகளுக்கும் அரசு அழைப்பு

கொழும்பு, ஆக: 9

வன்செயல்களை நிறுத்துமாறு சகலருக்கும் விண்ணப்பிக்கும் பகிரங்க அறிக்கை ஒன்றைக் கூட்டாக விடுப்பதற்கு வருமாறு அரசாங்கம் சகல கட்சிகளையும் அழைக்க உள்ளது:

இது சம்பந்தமான தீர்மானம் ஒன்று, நேற்று அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சகல தரப்பாரும் வன்செயல்களை நிறுத்த வேண்டும் என்று கோரும் கூட்டு அறிக்கை ஒன்றை வெளியிட முன் வருமாறு நாடாளுமன்றத்தில் உள்ள சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களை, சபாநாயகர் மூலமாகக் கோருவது என்று அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் இயல்பு வாழ்க்கையைக் கெடுத்து, பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்கும் வன்செயல்களை நிறுத்துமாறு பகிரங்க அழைப்பை விடுக்குமாறு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத ஏனைய அரசியல் அமைப்புகளையும் கேட்டுக்கொள்வது எனவும் அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது:

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவினால் கொண்டு வரப்பட்ட இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நேற்றுக் காலை நடந்த நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் புதுடில்லிப் பேச்சுக்கள் குறித்தும் பிரஸ்தாபிக்கப் பட்டது:

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின பேச்சுவார்த்தைகள் பற்றி விளக்கினார்.

புதுடில்லிப் பேச்சுக்கள் குறித்து வியாழன், வெள்ளிக்கிழமைகள் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும் என்றும் அதன் பின்னர் வெள்ளி இரவு விசேட அமைச்சரவை அது குறித்து ஆராயும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அமைச்சரவை விரிவாக ஆராய்ந்த பின்னர் ஜனாதிபதி முடிவு செய்வார் எனவும் அறிவிக்கப் பட்டது. (அ)

### வல்வைச் சம்பவங்கள்

## விசாரணைக் குழு அமைக்க ஈ. ஜ. மு. கோரிக்கை

லண்டன், ஆக. 9

கடந்த 2ஆம் திகதி முதல் வல்வெட்டித்துறைப் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள், மனிதஉரிமைமீறல் சம்பவங்கள் ஆகியவை குறித்து விசாரிக்க குழு ஒன்றை நியமிக்கும்படியும், சம்பவங்கள் நடந்த இடத்தை நேரடியாகச் சென்று பார்வையிடும்படியும் சகல அரசியல் கட்சிகளையும் ஈழவர் ஜனநாயக முன்னணி கோரியிருக்கிறது:

இந்த அசம்பாவிதங்களில் எழுபதுக்கும் அதிகமான

[6 ஆம் பக்கம் பார்க்க)

## சத்தியபிரமாணம்

கொழும்பு, ஆக. 9

ஈழவர் ஜனநாயகமுன்னணி எம்.பி. திரு. எஸ். சிவமகாராசா நேற்று நாடாளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்; [ஓ-10]

## 24 மணித்தியாலங்களில் 13 பொதுமக்கள் பலி!

கொழும்பு, ஆக. 9

நேற்றுக் காலைவரை முடிந்த 24 மணித்தியாலங்களில் தென் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் வருமாறு:-

13 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 2 பேர் காயமடைந்தனர்.

2 பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டனர். ஒருவர் காயமடைந்தார்.

157பேர் பாதுகாப்புப்படையினரால் விசாரணைக்காக கைது செய்யப்பட்டனர்-

கேகாலையில் சூட்டுக் காயங்களுடன் மூன்று சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. இராணுவத்தை விட்டு வெளியேறிய ஒருவரின் சடலமும் அவற்றில் ஒன்று என்று அடையாளம் காணப்பட்டது:

இன்னும் வெவ்வேறு இடங்களில் அதிரடிப் படை வீரர் ஒருவரும் பாடசாலை அதிபர் ஒருவரும் சுட்டுக் கொல்லப் பட்டனர். (ஓ-எ)

## சகல பாடசாலைகளும் அடுத்த வாரம் ஆரம்பம்?

கொழும்பு, ஆக 9

நாட்டில் உள்ள சகல அரச பாடசாலைகளும்அடுத்தவாரம் ஆரம்பிக்கப்படலாம்.

இதுசம்பந்தமான தீர்மானம் ஒன்றை அரசு நேற்று முன்தினம் எடுத்திருப்பதாக கொழும்புச் செய்தி தெரிவிக்கிறது.

சென்ற முதலாம் திகதி ஆரம்பமாகவிருந்த பாடசாலைகள் அனைத்தும் பாதுகாப்பு அமைச்சின்பணிப்பின் பேரில் காலவரையறையின்றி ஒத்திப் போடப்பட்டிருந்தது தெரிந்ததே. (-எ)

### மாலைதீவு அரசு கவிழ்ப்பு முயற்சி:

## மேலும் 14 இலங்கையருக்கு சிறைத்தண்டனை விதிப்பு

மாலைதீவு அரசைக் கவிழ்க்க இராணுவத் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக மேலும் 14 இலங்கையருக்கு 17 தொடக்கம் 28 ஆண்டு கால சிறைத் தண்டனையை மாலைதீவு உயர் நீதிமன்றம் நேற்று விதித்தது.

மரணம், காயம், சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை ஆகியவை தொடர்பாக ஒரு கோடியே 40 லட்சம் ரூபா நஷ்டஈடு செலுத்தும்படி இவர்களுக்கு உத்தரவிடப்பட்டது:

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக ஆறு இலங்கையருக்கு ஏற்கனவே மரணதண்டனை விதிக்கப்பட்டது தெரிந்ததே: (உ-எ)

(மற்றொரு செய்தி 6 ஆம் பக்கத்தில்)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**தேவை**

எமது காரியாலயத்திற்கு முகவர் நிலையத்தில் அனுபவம் உடையவராகவும், 25-45 வயதிற்குட்பட்டவராகவும் உள்ள ஒருவர் தேவை (ஆண்). நேர்முகப்பரீட்சைசெவ்வாய்க்கிழமையில் இருந்து வெள்ளிக்கிழமை வரை 9 மணியில் இருந்து 4 மணிவரை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும் சுஜேரா ரவல்ஸ் அன் ரூர்ஸ், 21, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (C/3252)

**பூசகர் தேவை**

காலை மாலை இருகாலப் பூசைக்கு ஒழுக்கமும், பயபக்தியும் நிறைந்த பிராமணக் குடும்பஸ்தர் உடனடியாகத் தேவை. வீடு கொடுக்கப்படும். விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். தருமகர்த்தா, ஸ்ரீநாகபூஷணியம்மை தேவஸ்தானம், அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. (1354)

**மணப்பெண்தேவை**

ஜேர்மனியில் வசிக்கும் 24 வயது செவ்வாய்க்குற்றமுள்ள மணமகனுக்கு அவருடைய தாயோடு செல்ல விரும்பும் 18 - 24 வயதுக்கிடைப்பட்ட மணப்பெண் தேவை; மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (11700)

**மணமக்கள் தேவை**

யாழ். உயர் சைவ வெள்ளாள 41 வயது மேற்பட்ட இலங்கை பட்டதாரிகள் ஆண் (என்ஜினியர்) பெண், பயிற்றப்பட்ட ஆசிரிய ஆசிரியைகளுக்கு மணமக்கள் தேவை. சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். வி. இலக்கம்: 81, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (11776)

**மணவாளன் தேவை**

யாழ்ப்பாண வேளாள 35 வயது பட்டதாரி கிறிஸ்டியன் மணமகளுக்கு ஒத்தமணமகன் தேவை. சமயம் தடையாக இராது. மங்கள ஏஜென்சி, யாழ்ப்பாணம். (1368)

**சமூககல்வி ஆண்டு 11**

சமூகக்கல்வி ஆண்டு 11 குறிப்புகள் வெளிவந்து விட்டது. (திருத்திய இரண்டாம் பதிப்பு), சமூகக்கல்வி ஆண்டு 10 (150 விடயங்கள்) ஆக்கம்: நா. மயில்வாகனம், பரியோவான் கல்லூரி. மாணவர்கள் தாமாகவே விளங்கிக் கற்றுக் கொள்ள ஏற்றவை. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (1178[illegible])

**உடன் விற்பனைக்கு**

புதிய Panasonic A-2 model Video camera NV 180 E Video deck, Cannan AE-1 model Still Camera என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. சதாசிவம், 3, விக்ரோரியாரோட், யாழ்ப்பாணம். (11783)

**கோழிக்குஞ்சு விநியோகம்**
**Uplands Farm**

(Dekalb) பிறவுண் [illegible] சேவல் (Cobb) புரொயிலர் குஞ்சுகள் (09 - 08 - 89) [illegible] கிழமை விநியோகிக்கப்படும். (சேவல் குஞ்சு 50க்கு மேல் எடுப்பவர்களுக்கு வி[illegible] ரூபா 3/50) உடன் [illegible]தியவும். இல. 09, கந்தை[illegible] லேன், சுன்னாகம். (பு[illegible] பிரத நிலையத்துக்கு அ[illegible] அமையில்) குறிப்பு: இர[illegible] குஞ்சுகளுக்கு லை[illegible] அவசியமில்லை. (1349)

**இறைச்சிக்கோழி விற்பனைக்கு**
**V. K. S. FARM**

புரொயிலர் கோழிகள் பேட்டுக் கோழிகள், சேவல் கோழிகள், விருத்துக் குஞ்சுகள், குட்டி குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்துகொடுக்கப்படும். No-12 கனகசபை லேன், சிவலிங்கப் புளியடி, யாழ் இந்துக்கல்லூரி, பின்பக்கம். (11757)

**அளவையியல் II**

ஆசிரியர் கேசவன் எழுதிய 1989 ஆம் ஆண்டு ஆவணிப் பரீட்சைக்குரிய அளவையியல் வினா-விடைக் களஞ்சியம் பகுதி II. யாழ்நகர் பிரபல புத்தக நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம் விலை ரூ. 30/- (1325)

# கண்ணீர் அஞ்சலிகள்

எங்களில் ஒருவனாய்
எப்போதும் சிரிப்புடனே
பம்பரமாய்ப் பணிபுரிவாய்!
பண்புடன் பணிவடக்கம்
என்றும் நிறைந்தவனாய்
எல்லோர் மனங்களிலும்
நல்லவனாய் வாழ்ந்தாய் நீ!
இன்று எம்மோடு நீ இல்லையே!
எங்குற்றாய்? ஏன் நீத்தாய்?
அரவமாய் வந்து நின்ற
எமனோடு சென்றனையோ?
இந்த இளவயதில் நீ இயற்றவென
பணிகள் பல காத்திருக்க
உற்றவர்களைத் தவிக்கவிட்டு
ஊனுடம்பு உதறினையோ!



பிறப்பு:
30 - 04 - 1968

●

இறப்பு:
08 - 08 - 1989

நா. மதனராஜனுக்கு
எமது இதயம் நெருடிய
கண்ணீர் அஞ்சலிகள்!

சோகம் தீராத
- உதயன்
- சஞ்சீவி
நிறுவன ஊழியர்கள்

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இதய அஞ்சலி



**சுப்பிரமணியம் திருநாவுக்கரசு**
(கண்ணன்)

தாயின் மடியில்: 14 - 05 - 1970
ஆண்டவன் அடியில்: 12 - 04 - 1989

தரணியில் உயர்ந்து நின்றாய்
கண்ணா! உனை
கண் போன்று வளர்த்தோம்
கண்கள் கலங்கிட மனம் துடித்திட எமை விட்டு
காத தூரம் சென்றனையோ!
கண்ணா நீ மரணித்து விட்டாயா?
எம்மால் நம்பவே முடியவில்லையடா
வருவாய் வருவாய் என்று
வாசலில் விழித்திருந்து வாடிவிட்ட எம் உள்ளம்
இனி என்று தேறும் கண்ணா!
பெற்றமனம் கலங்கி நிற்க
உற்ற சோதரர் ஏங்கி நிற்க
மற்ற உறவுகள் வாடி நிற்க - கண்ணா
மறைந்தெங்கே போனாய்?
பூவாகி புதுமணம் வீசி
பூத்துக் குலுங்கும் வேளை
வாடிவிட்ட மலராய்
மண்ணிலே உதிர்ந்தனையோ
கண்ணன் எங்கள் மைந்தன்
எங்கள் சோதரன் என்று
உன்னைக் கூறுவதில் - இன்று
பெருவகை கொள்ளுகின்றோம் ஐயா!

உன்பிரிவால் ஏங்கும்:
பெற்றோர், சகோதர சகோதரிகள்,
உறவினர், நண்பர்கள்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (11785)



# விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L** பிரிவு 6 **Day Classes**
**EveningClasses**
(2.00 - 4.00)

**ஆரம்பம்: 14 - 8 - 1989**

★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு: ★

| | |
|---|---|
| விஞ்ஞானம்:- | திரு. J. R. சூரி |
| கணிதம்:- | திரு. செல்வா |
| ஆங்கிலம்:- | திரு. விஸ்வநாதன் |
| தமிழ்:- சமயம்:- | திரு. சுந்தரலிங்கம் |
| சமூகக்கல்வி:- | திரு. கருணாகரன் |
| | திரு. சுந்தரமூர்த்தி |
| வர்த்தகம்:- | திரு. கருணாகரன் |

முக்கிய குறிப்பு:
கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தப்படும் ஒரே நிறுவனம்.
● விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும். (சி/3254)



யா/ கனகரத்தினம் ம. ம வி.

**க. பொ. த. (உயர்தரம்) 1991**
**புதிய மாணவர் அனுமதி**

1991 ஆம் ஆண்டு க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர் அனுமதிக்கான விண்ணப்பங்கள் 15 08.1989 வரை கல்லூரிக் காரியாலயத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

அதிபர்.

யாழ்/கனகரத்தினம்
மத்திய மகாவித்தியாலயம்,
யாழ்ப்பாணம். (11784)



**25, 000 ஆசிரிய பயிலுநர் பரீட்சை வழிகாட்டி**

● பொது உளச்சார்பும்
கல்வி முகாமைத்துவமும் ●
விலை ரூ. 39 / 50

ஆசிரியர் C. V. குணசேகரம் B. A.
வெளியீடு:
பட்டப்படிப்புக்கள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (சி/3196)



**● நன்றி நவிலல் ●**

**அமரர் இராமலிங்கம் கந்தையா அவர்கள்**
[இளைப்பாறிய ஓவசியர் பகிரங்கவேலைப்பகுதி, பேருவளை]

18 - 07 - 1989 இல் சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் இராமலிங்கம் கந்தையா அவர்களின் ஈமக்கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், எல்லா வகையாலும் உதவி செய்தவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தனித்தனி அறிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். [1469]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 28-02-1928
இறைவன் அடி: 10-07-1989

**அமரர் தம்பிராசா சிவபாதம்**
(பிரபல வர்த்தகர் — அநுராதபுரம்)

தும்பளைவீதி, பருத்தித்துறையைச் சேர்ந்த திரு. த சிவபாதம் 10-07-1989 அன்று இறைவனடி சேர்ந்தார். இவர் புஸ்பவதியின் அன்புக் கணவரும் சிவகுமார் (கனடா), சூரியகுமார் (கனடா), கிருஷ்ணகுமார் (ஜேர்மனி), நந்தகுமார் (ஆசிரியர்) விக்னேஸ்வரி, கலைவாணி ஆகியோரின் அன்புத்தந்தையும், திருமதி ஜமுனா (ஆசிரியை), திருமதி அஞ்சலிதேவி, தேவராசா ஆகியோரின் மாமனாரும் சிவயோகம், சிவரத்தினம், சரஸ்வதி, கதிரமலைராசா ஆகியோரின் சகோதரரும் ஆவார்

அன்னாரின் 31ஆம் நாள் கிரியைகள் 09-08-1989 இன்று அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும். இதனை உற்றார், உறவினர், ஏற்று இதில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

திரு. S. நந்தகுமார் (ஆசிரியை)

தும்பளை வீதி,
பருத்தித்துறை. (சி/3265)

# 8 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



**பெருமாள் - உதயன் (நித்தி)**
(பழையவீதி, இருபாலை - கோப்பாய் தெற்கு)

தோற்றம்: 1956. 06. 09
மறைவு: 1989. 07. 31

கோப்பாய் - தெற்கு இருபாலை பழைய வீதியைச் சேர்ந்த பெருமாள் - செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் சந்தசாமி (ஸ்ரீராம் தொழிற்சாலை, இருபாலை.), மகாலிங்கம் (ஜனி), திருமதி தெய்வேந்திரராணி, தெய்வேந்திரராசா (ரவி), (ஜேர்மனி ரவி), காலஞ்சென்ற செல்வராணி (லலி) ஆகியோரின் சகோதரரும், திருமதி அருங்கிளி, திருமதி யோகேஸ்வரி, சுதந்திரபாலன் ஆகியோரின் மைத்துனருமாகிய உதயன் (நித்தி) 31-07-1989 இல் அகாலமரணமானார். அன்னாரது ஈமக்கிரியைகள் 01-08-1989 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
(11782) — குடும்பத்தினர்

# 7ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



தோற்றம்: 29 - 08 - 1961

●●●●

மறைவு: 03 - 08 - 1989

**திரு. துரைராஜா நாகதாஸ்**
(மின்னியலாளர் லங்கா சீமெந்து நிறுவனம், காங்கேசன்துறை)

பண்புடைச் செம்மல் அன்புடை நாகதாஸ்
உன் பிரிவென்பது எம் உயிர் பிரிந்தனையது
செய்தி அறிந்ததும் செயலற்றிருந்தோம்
எய்திய துன்பம் என்றுதான் மாளுமோ?
ஆத்ம சாந்தியை வேண்டியே செலுத்தும்
கண்ணீர் அஞ்சலி இது எம் காணிக்கை!

மின் பகுதி ஊழியர்கள்,
(லங்கா சீமெந்து நிறுவனம்)

(1467)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 17 - 02 - 1930

●●●●

உதிர்வு: 09 - 08 - 1987

**திரு. கபிரியல் பெனடாற்**
(பெற்றோலியக் கூட்டுத்தாபனம்)

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

எங்களின் உள்ளத்தை விட்டு மறைக்கவும் மறக்கவும் இயலாத எங்கள் தந்தையின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

154, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (1468)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

குறள்:

நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம் பழுத் தற்று:

பொருள்:

பிறர்க்கு உதவாத காரணத்தால் ஒருவராலும் விரும்பப் படாதவனுடைய செல்வம், ஊர் நடுவில் நச்சு மரம் பழுத்தாற் போன்றது.


# உதயன்

இல 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம்: 22073
09 - 08 - 1989 த. பெ. இல. 23


## அரச ஊழியருக்கு நீதி பேதம் ஏன்?

அரசாங்க ஊழியர்களின் லீவு மற்றும் சலுகைகள் விடயத்தில் பாகுபாடு காட்டப்படுவதாகப் புகார் கூறப் படுகிறது. தென்பகுதி ஊழியர்கள் ஒருவிதமாகவும், வடபகுதி ஊழியர் வேறு விதமாகவும் நடத்தப்பட்டிருப்பதாகக் குறை சொல்லப்படுகிறது.

பிரதானமாக, ஊரடங்கு, ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும் நாட்களில் அரச ஊழியர்கள் கடமைக்குச் சமுகமளிக்காத விவகாரத்தில், இந்தப் பாரபட்சம் என்று முறையிடப்படுகிறது.

குறிப்பிட்ட நாட்களில் வேலைக்குச் செல்லாத அரச ஊழியர்களுக்குத் தெற்கில் விசேஷ லீவுச் சலுகைகள் வழங்கப்படுகின்றனவாம். ஆனால் வடக்கில் வேலைக்குச் செல்லாதவர்களுக்கு அந்த வசதிகள் இல்லை. அதற்குப் பதிலாக, அவர்கள் வேலைக்கு அறிவிக்காமல் சமுகமளிக்காதவர்கள் என்று கருதப்பட்டு, சம்பளத்தில் வெட்டப்படுகிறதாம். இந்தப் பாரபட்சம், அநீதி குறித்தே வடக்கில் உள்ள அரச ஊழியர்கள் மத்தியில் பெரும் மனக்குறையும் அதிருப்தியும் நிலவுகிறது. அவர்களது மனக்குறை நியாயமானதே.

ஹர்த்தால் அழைப்புகள், படையினரின் உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு அறிவிப்புகள், சுற்றிவளைப்புகள் என்பன வடக்கிற்குப் பழையன. அவற்றினால் அரச அலுவலகங்கள் மட்டுமன்றி மக்களின் நாளாந்த வாழ்க்கையும் முற்றாகப் பாதிக்கப்படுவது இயல்பாகி இருந்தது வடக்கில்தான். மாதத்தில் பத்து நாட்களுக்கு அதிகமாகக் கூட ஹர்த்தால், ஊரடங்கால் வடக்கு மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்ட காலமும் உண்டு; அவர்களின் பொருளாதாரம் சீர்குலைந்ததும் உண்டு.

ஹர்த்தால், ஊரடங்கு வேளைகளில் போக்குவரத்து நடப்பதில்லை. அதனால் ஊழியர்கள் தமது வேலைத் தலங்களுக்கு, அலுவலகங்களுக்குச் செல்வது கஷ்டமான காரியம் தான். ஆனால் ஹர்த்தாலும், ஊரடங்கும் பல நாட்கள் அனுஷ்டிக்கப்பட்டால், அடிக்கடி வந்தால் ஊழியர்களின் வரவின்மையால் பொது மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகள் தாமதமாகும்: தடங்கலாகும் என்பதையும் எவரும் மறந்துவிடலாகாது.

ஹர்த்தால், ஊரடங்கு ஆகியன மட்டுமன்றி வன்செயல்கள், கொலைகள் ஆகியனவும் இப்போது தெற்கையும் சூழ்ந்து கொண்டுவிட்டன. வேலைக்குச் செல்லக் கூடாது என்ற பயமுறுத்தல், அரசாங்கம் அறிவிக்காத ஊரடங்கு என்பனவும் அங்கு மலிந்து விட்டன. மொத்தத்தில் வடக்கில் இருந்த இயல்பு குலைந்த நெருக்கடி நிலைமை தெற்கிலும் வளர்ந்துவிட்டது

ஆனால் அவற்றின் பெயரால், அவற்றைச் சாட்டாக வைத்துக் கொண்டு பல நாட்கள் அலுவலகம் செல்லாத அரச பணியாளர்கள் அங்கு ஏராளம் என்பதும் உண்மை; தங்களுக்கும் ஏதோ ஒருவித பயமுறுத்தல் அல்லது ஆபத்து வந்திருப்பதாக சோடித்துக் கூறியாவது கடமையைத் தட்டிக்கழிக்கின்றனர் தெற்கின் அரச ஊழியர்கள். வடக்கில் நிகழ்ந்தது போன்ற பெருமளவிலான இராணுவ நடவடிக்கைகள் இன்னும் அங்கு இல்லை. ஆனால அப்படியான பாதிப்பும் ஏற்பட்ட தோரணையில் அங்கு அரச ஊழியர்கள் கடமைக்குச் செல்லாதிருக்கின்றனர்.

இவர்கள் நிச்சயம் தண்டிக்கப்படவேண்டியவர்களே ஆனால் தெற்கில் (அவர்களுக்கும் சேர்த்து) கடமைக்கு வராத அரச ஊழியர்களுக்கு விசேட லீவு வசதி வழங்கப்படுகிறதாம். இது அரச நிர்வாகத்துக்கு ஒவ்வாத ஏற்பாடு அலுவலகத்துக்கு வராத நாட்களுக்குப் பதிலாக மேலதிக நாட்கள் வேலை செய்ய வேண்டும் என்ற கட்டாய விதிமுறையைக் கொண்டு வந்தால் விசேட லீவு வசதி எவருக்கும் தேவைப்படாது. அதே வேளை அரச ஊழியர்களின் சம்பளத்தை வெட்டி அவர்களுக்குப் பாதிப்பும் ஏற்படச் செய்யும் அவசியமும் இருக்காது. மக்களுக்குச் செய்ய வேண்டிய அலுவல்களைச் செய்வதற்கும் வசதியாகவும் இருக்கும்;

அவ்வாறான ஒரு மாற்று வழியை அமுல் செய்வதற்குப் பதிலாக வடபகுதி அரச ஊழியர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் விதத்திலும், தென்பகுதி ஊழியர்களுக்குச் சலுகை வழங்கும் விதத்திலும் நடவடிக்கை மேற்கொள்வது பெரும் அநீதியாகும். கண்டிக்கப்பட வேண்டியதாகும்; அந்தப் பாரபட்சமுறை உடன் நீக்கப்படவேண்டும். இதுபோன்ற சிறுவிடயங்களில் கூட வடக்குக்கு ஒரு நீதி; தெற்குக்கு ஒரு நீதி என்ற அநியாயத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுவது எப்போது?

# பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள்

# யாழ். ஆஸ்பத்திரியில் தேக்கம்

## தெளிவில்லாத முகவரிகளே காரணம்

யாழ்ப்பாணம், ஆக. 9

யாழ். ஆஸ்பத்திரியில் 300 க்கும் மேற்பட்ட பிறப்பு—இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் உரிமையாளர்களினால் எடுத்துச் செல்லப்படாமல் தேங்கிக்கிடக்கின்றன.

பிறப்பு - இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களுக்கு விண்ணப்பிப்போர் முகவரிகளை தெளிவாக எழுதாதன் காரணமாகவே உரியவர்களுக்கு இவற்றை அனுப்ப முடியாது இருப்பதாக அங்கு தெரிவிக்கப்பட்டது.

எனவே இவற்றுக்கு விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளாதவர்கள் நேரடியாக யாழ் ஆஸ்பத்திரியின் பிறப்பு - இறப்பு பதிவாளர் அலுவலகத்துக்கு வந்து பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அண்மையில் பிறப்புப் பத்திரங்களுக்கு விண்ணப்பித்தவர்கள் பதிவுப் புத்தகங்கள் யாழ்; செயலகத்தில் இருந்து கிடைத்ததும் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-10)

### களஞ்சியம்

கோப்பாய், ஆக. 9

கோப்பாய் உதவி அரசாக அதிபர் பிரிவில் யு என். சி. ஆர் இன் களஞ்சியம் ஒன்று திறந்து வைக்கப் பட்டுள்ளது. (க-72)

## இலங்கை இணங்கினால் பேச்சுக்கள் எப்போது?

கொழும்பு, ஆக. 9

இந்திய யோசனைகளை ஏற்று பேச்சுக்களைத் தொடர இலங்கை அரசு முன்வந்தால், அடுத்த கட்ட பேச்சுக்கள் எப்போது நடைபெறும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

வருகிற செப்டம்பர் முதல் வாரத்தில் யூகோஸ்லேவியா தலைநகர் பெலகிறேடில் அணிசேரா இயக்கத் தலைவர்கள் உச்சி மாநாடு நடைபெற உள்ளது.

இந்திய-இலங்கைப் பேச்சுக்கள் மீண்டும் தொடருவதானால் இந்த உச்சி மாநாட்டுக்கு முன்னர் இடம் பெறுமா அல்லது பின்னர் இடம்பெறுமா என்பது இன்னும் தெளிவாக இல்லை.

ஆனால் இரண்டாம் கட்டப் பேச்சுக்களை கொழும்பில் நடத்தவே இந்தியா விரும்புவதாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்து உள்ளது; (உ-எ)

### பதவி உயர்வு

ஒட்டுசுட்டான் ஆக 9

விளையாட்டுத்துறை அதிகாரியாக கடமையாற்றி வந்த திரு. கே. கார்த்திகேசு முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரியாக பதவி உயர்வு பெற்றார். (க-113)

## குறைபாடுகள் பற்றிய அறிக்கைகள் உதாசீனமாம்

யாழ்ப்பாணம் ஆக. 9

யாழ் மாவட்டத்தில் உள்ள தொழிலாளர்களின் குறைபாடுகள் குறித்து தொழிற் திணைக்களம் சமர்ப்பிக்கும் அறிக்கைகளை நடைமுறைப் படுத்தாது தொழில் அதிபர்கள் உதாசீனம் செய்கின்றார்களாம்.

இப்படித் தெரிவிக்கிறது யாழ் தொழில் திணைக்களம்.

யாழ் தொழில் திணைக்கள அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

''யாழ் மாவட்டத்தில் உள்ளதொழிலகங்களில் உள்ள தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு, சுகாதார வசதிகள், நலன்புரிச்சேவை ஆகியன குறித்து எம் உத்தியோகத்தர்கள் நேரடியாகப் பார்வையிட்டு குறைபாடுகள் குறித்து அறிக்கைகளை தொழிற்சாலை உரிமையாளர்களிடம் சமர்ப்பிக்கின்றார்கள் இன்றைய சூழ்நிலையில் அவர்கள்மீது மேல் நடவடிக்கை எடுக்கமுடியாது உள்ளது.

இப்படி அவர்கள் தெரிவித்தார். [த-3]

## டெங்கு காய்ச்சலுக்கு 6 மாதத்தில் 63 பேர் பலி!

கொழும்பு, ஆக. 9

டெங்கு காய்ச்சல் காரணமாக இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில் நாட்டில் 63 பேர் உயிரிழந்தனர்.

கடந்த ஆண்டில் இரண்டோ, மூன்று பேர்தான் இக் காய்ச்சல் காரணமாக உயிரிழந்தனர்.

இந்த ஆண்டில் டெங்கு காய்ச்சலால் அதிக உயிரிழப்புக்கள் ஏற்பட்டதற்கான காரணத்தைக் கண்டறிய மருத்துவ ஆராய்ச்சி இன்ஸ்டிடியூட் ஆய்வு நடத்தி வருகிறது. (ஒ எ)

### காப்புறுதி செய்யப்பட வேண்டும்

கொழும்பு, ஆக. 9

தொலைக்காட்சி, வானொலி மற்றும் பத்திரிகை ஸ்தாபனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் ஒவ்வொருவரும் பத்து லட்சம் ரூபாவிற்கு காப்புறுதி செய்யப்பட வேண்டும் என்று இலங்கை பத்திரிகையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது. (த- எ)

## வீடமைப்புப் பணிகளுக்கு 50 ஆயிரம் சிமெந்து பைக்கெட்

யாழ்ப்பாணம், ஆக 9

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் யாழ் மாவட்டத்தில் வீடிழந்தோருக்கும் வீடு சேதமாக்கப்பட்டவர்களுக்கும்வீடமைத்துக் கொடுக்கும் பணியில் துரிதமாக ஈடுபட்டுள்ள இவ்வேளையில் வடபகுதிக்கான மின்சாரத் துண்டிப்பினால் சிமெந்தை கிரமமாக பெற்றுக் கொள்ள முடியாத பெரும் நெருக்கடி நிலை தோன்றி உள்ளது;

இது விடயத்தில் வீடமைப்பு அதிகாரசபை எடுத்துக் கொண்ட பெரு முயற்சியின் பயனாக மேற்படி திட்டத்துக்கு 50 ஆயிரம் சிமெந்துப் பைக்கெட்டுகள் வழங்கப்பட உள்ளன.

இந்த சிமெந்துப் பைக்கெட்டுகள் வீடமைப்பு அபிவிருத்தி சபையினால் உருவாக்கப்பட்டு வரும் உதவி அரச அதிபர் பிரிவுகளின் களஞ்சியங்களில் வைக்கப்பட்டு பின்னர் வீடமைப்பு தொழில் நுட்ப உத்தியோகத்தவர்களின் சிபார்சுகளுக்கு ஏற்ப அப்பகுதிகளில் அமைக்கப் பட்டு வரும் வீட்டுச் சொந்தக்காரர்களுக்கு வழங்கப்பட உள்ளன என வீடமைப்பு அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (க-13)

உள்ளூர், வெளிநாட்டு

## வானொலி ஒலிபரப்புக்களை இடைமறித்து குழப்பவில்லை

### இ. ஒ. கூ. மேலதிகப் பணிப்பாளர்

கொழும்பு, ஆக. 9

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வானொலி ஒலிபரப்புக்களை இடைமறித்து குழப்பும் வேலையில் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் ஈடுபடவில்லை என்று அதன் மேலதிக பணிப்பாளர் ஹட்சன் சமரசிங்கா அறிவித்திருக்கிறார்.

''அப்படி ஒலிபரப்புக்களைக் குழப்பக்கூடிய சாதனங்கள் எம்மிடம் இல்லை அந்த வேலையில் எமது ஊழியர்கள் ஈடுபடவும் இல்லை.

அப்படி ஈடுபடுவதாகக் கூறப்படுவது சில விஷமிகளால் பரப்பப்பட்டுள்ளவதந்தியாகும்''— இப்படி மேலதிகப்பணிப்பாளர் தெரிவித்தார். (த- எ)

### புதிய பாடசாலை

யாழ்ப்பாணம், ஆக 9

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் கிராமத்தில் புதிதாக பாடசாலை ஒன்று பிரதி கல்விப்பணிப்பாளர் திரு. கந்தசாமியால் திறந்து வைக்கப் பட்டது;

வைபவத்தில் கல்வி அதிகாரிகள் திரு. தர்மரத்தினம், திரு வேலாயுதம், திரு. தனஞ்சயன், திரு. கமலநாதன அக்கராயன் கொத்தணி அதிபர் திரு. சின்னராசா ஆகியோர் கலந்து கொண்டார்கள். (த-76)

# தமிழ்த் திருமுறை வழிபாட்டுக்கு வழிகாட்டிய தொண்டர் சுந்தரர்

பிறவி சைவசித்தாந்தம் நிலைநாட்டும் உண்மை; இது வினையின் பயன். விதியின் விளையாடலை விலக்க வல்லார் யார்? இவ்விதியின் சதிக்கு சுந்தரமூர்த்தி சுவாமிகளும் விதிவிலக்கல்லர்.

திருக்கைலாயத்தில் சுந்தரி

### சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைத்தினம் இன்று

இருவரை சிந்தை திரிந்து காதலித்தனர் சுந்தரர். ஆரூரரின் ஆராக் காதலுக்குக் குறுக்கே நிற்க விரும்பாத அம்மையப்பர், அவரைப் பூமிக்கு இறக்கி காதலைக் கனியவைக்க எண்ணினார். அப்போது ஆரூரர் சிவபிரானைத் தொழுது, 'அடியேன் மானுடப் பிறவி எடுத்து மயங்கும்போது, தயங்கும்போது தேவரீர் என்னைத் தடுத்தாட் கொள்ள வேண்டும்' என்று வேண்டி இறைவனின் இசைவையும் பெற்றனர்.

நம்பி ஆரூரர் என்ற நாமத்துடன் திருமுனைப்பாண்டி நாட்டில் சுவாமிகள் திருஅவதாரஞ் செய்தார். முன்னர் வாக்களித்தபடி, ஆரூரரை அவரின் திருமணப் பெருவிழா அன்று தடுத்தாட் கொள்ள திருவுளங் கொண்ட பெருமான் வயோதிப சிவப்பிராமண வேடந் தாங்கி, ஒப்பந்த ஓலையைக் கையில் ஏந்தி சுந்தரரின் [illegible] ருள் நுழைந்தார்; ஆரூரர் தமது அடிமையென [illegible] தமது வழக்குத் தீர்ந்த பின்னரே மணம் நடக்கலாம் என்று தடுத்தார். வாக்குவாதத்திற்கு இடையில் இறைவனை நம்பியாரூரர் 'பித்தன்' என்று அழைதது ஓலையைப் பறித்துக் கிழித்தார். மூல ஓலையின் சான்றுடன் ஆரூரர் அந்தணருக்கு அடிமையெனத் தீர்ப்பைச் சான்றோர் வழங்கினர். உடனே இறைவன் திருவருட்துறை என்னும் ஆலயத்துட் புகுந்து இடபாரூடராய் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்தாட் கொண்டார்.

உள்ளம்உருகி உமைபாகரை உள்ளத்திருத்திய சுந்தரரை, சிவபிரான் நோக்கி 'மற்று நீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம் பெற்றனை' என்று பாராட்டும் 'வன்தொண்டன்' பட்டமும் வழங்கினர். தொடர்ந்து சுந்தரரைப் பாடுமாறு பரமன் பணிக்க அவர் பாடத் தெரியாது பரிதவித்தார். அவரை இறைவன் விழித்து முன்னை என்னைப் 'பித்தன்' என்று மொழிந்ததால் 'பித்தா' என்றே பாடுக என்று அடியெடுத்துக் கொடுத்தார். திருவருள் வழி நடத்த, 'பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா' என்ற முதலடியைக் கொண்ட தேவாரத்தைத் தொடங்கி நூறு பதிகங்கள் அடங்கிய ஏழாம் திருமுறையை ஆரூரர் ஆக்கி அருளினார்;

'வன்தொண்டன்' என்ற [illegible] களுக்கு சிவபிரான் வழங்கிய போது தம்மை வணங்கும் வழியையும் வலியுறுத்தினர்.

''—நமக்கும் அன்பில்
பெருகிய சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டேயாகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக'' என்றார்

தூமறை பாடும் வாயார்' எனறு தமிழில் திருமுறையே வழிபாட்டிற்கு வழி என்பதை சிவபெருமானே கோடிட்டுக் காட்டியுள்ளார்.

வாழி வன்றொண்டர் பதம் போற்றி! ★

க. கயிலாயநாதன்
[வட்டுக்கோட்டை கலாநிலைய முதல்வர், முன்னாள் அதிபர்]

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

#### கருணைக்கோர் தெய்வம்

எடுப்பு

கலியுக வரதனப்பா நல்லூரா — நீ
கருணைக்கோர் தெய்வமப்பா (கலி)

தொடுப்பு

மெலிவுகள் அகற்றுதற்கே — இந்த
மேதினி வந்தாயப்பா (கலி)

முடிப்பு

தெளிவுந்தன் திருமுகத்தைத் — தினம்
திருமுன்னே காண்பதப்பா
ஒளிபெறும் உன்முகங்கள் — அவை
ஒவ்வொன்றும் கருணையப்பா; (கலி)

நயினைக்கவிஞர் நா க. சண்முகநாதபிள்ளை
(இன்று நல்லூர்க்கந்தன் நான்காம திருவிழா)

### சமய சந்நிதிகளில்

#### குருபூசை

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் இன்று புதன் கிழமை காலை 10-00 மணியளவில் நல்லூர் ஸ்ரீ சட்டநாதஸ்வாமி ஆலயத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை விழா கொண்டாடவுள்ளனர்; இவ்விழாவில் பண்ணிசை, சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும்; (க)

#### செபமாலை மாதா ஆலய திருவிழா

குருநகர், ஆக. 9

சரவணை, சின்னமடு செபமாலை மாதா ஆலயவருடாந்த திருநாள் கடந்த சனிக்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது;

காலை 7 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலியை அடுத்து 8.30 மணிக்கு திருச் சொருப ஊர்வலம் நடை பெற்றது.

9—மணிக்கு சொருப ஆசீர்வாதம் வழங்கப்பட்டதுடன் திருநாள் கொண்டாட்டம் நிறைவு பெற்றது; (க-51)

### வாசகர் திருமுகம்

#### பாலத் திருத்தம்

நல்லூர், அரியாலை ஆகிய பகுதிகளின் எல்லையாக இருக்கும் ஆசீர்வாதப்பர் வீதியின் குறுக்காக ஐந்தடி ஆழமும் ஏழடி அகலமும் கொண்ட ஒரு வாய்க்கால் செல்கிறது. இந்த வாய்க்காலுக்குக் கட்டப்பட்ட பாலம் உடைந்து பல காலமாக கவனிப்பாரற்ற நிலையில் இருந்து, பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை அடுத்து இப்போது திருத்த வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திருத்த வேலைக்கா ரூபா எழுபதினாயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் அத்திவாரம் புதிதாகக் கட்டப்படுவதாகத் தெரியவில்லை. அத்திவாரம் பலம் இல்லாமல் இருக்கும் போது அதன் மேல் கட்டப்படும் பாலம் திரும்பவும் இடிந்து விழும். இதனால் யாழ். மாநகரசபைக்கும் நட்டம்; ஊர் மக்களுக்கும் நட்டம்;

எனவே இதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் நல்லதொரு பாலத்தை அமைத்துத் தருமாறு படி கேட்டுக்கொள்கிறேன். மேலும், இப்பணத்தில் மீதி இருக்குமானால் இந்த வாய்க்காலின் இரு மருங்கிலும் சுவர்கள் கட்டி உதவ சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களாக!

ரி. உதயகுமார்,
அரியாலை.

#### முல்லைத்திவு மக்கள் வங்கி

முல்லைத்திவு மக்கள் வங்கி மந்த கதியில் செயல்படுகிறது. இதனால் வெளிநாட்டு காசோலைகளும் அரச ஊழியர்களின் சம்பளக் காசோலைகளும் மாற்றப்படாமல் வங்கியிலேயே தேங்கி இருக்கின்றன.

காசோலைகளை மக்கள் வங்கியில் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கும்போது அவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொண்டதற்கான பற்றுச் சீட்டை மட்டும் கொடுத்து விட்டு வேறு நடவடிக்கைகளைப் பின்போட்டு விடுகின்றனர். கூடியவிரைவில் அவற்றை கணக்குவைத்து சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பத் தவறுவதால் காசோலைகளைக் காசாக்க முடிவதில்லை. முல்லைத்திவு மக்கள் வங்கியினர் வேகம் பெறுவார்களா?

எஸ். ஆனந்தன்'
முல்லைத்திவு.

### திருமறைக் கலாமன்றக் கூட்டம்

குருநகர், ஆக. 9

யாழ் திருமறைக் கலாமன்றத்தின் ஒன்றியக் கூட்டம் யாழ் பிரதானவீதிஅலுவலகத்தில் அருட்திரு ஜீவாபோல் அடிகள் தலைமையில் நடைபெற்றது;

திருப்பலி ஒப்புக்கொடுத்தலைத் தொடர்ந்து வண. ஜீவாபோல் அடிகளார் மன்றத்தால நிறுவப்பட்ட கலைக்கூட நூலகமொன்றைத் திறந்துவைத்தார்.

வைபவத்தில் குடாநாட்டுக் கலைஞர் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

அதனை அடுத்து சமீபத்தில் மறைந்த நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்களுக்குஅஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது.

திருவாளர்கள் வி. ஜே. கொன்ஸன்ரைன், சி. எம். நெல்சன், டி, வி. அன்ரனி. எஸ். ஜெயசிங்கம், நவலியூர் சி என். செல்லத்துரை, ம யேசுதாசன், ஜி பி. பேமிலஸ் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். (க-51)

### அசையாமணி

புளியங்கூடல் செருந்தணைப்பதி ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானத்துக்கு அசையாமணி ஒன்று இங்கிலாந்தில் இருந்து அன்பளிப்பாகக் கிடைத்துள்ளது.

வெளிநாடுகளில் வேலை செய்யும் அம்பிகையின் அடியார்கள் அன்பளிப்புச் செய்துள்ள இம்மணியின் எடை 2000 இறாத்தல் எனவும் இதன் இலங்கைப் பணத்தின் பெறுமதி ஏழு லட்சம் ரூபா எனவும் தெரிவிக்கப்படுகிறது; (க 113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®          ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

தினமும் டியூரோல்® அருந்துங்கள், அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


# சிரமதானம் மூலம் சிறுகுளங்களை ஆழமாக்கத் திட்டம்

## பச்சிலைப்பள்ளிப் பகுதியில்

யாழ்ப்பாணம் ஆக 9

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் உள்ள சிறுகுளங்களை சிரமதானம் மூலம் ஆழமாக்கும் பணியில் படித்த யுவதிகள், கிராமிய தற்சார்பு வளர்ச்சிக் சழகங்கள் ஈடுபட உள்ளன.

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பின்தங்கிய கிராமங்களான மாசார்சோரன்பற்று, மல்வில், முகாவில், ஊர்வணிகம்பற்று, இயக்கச்சி, சாந்திபுரம், பேராலை, தர்மக்கேணி ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள படித்த யுவதிகள் கிராமிய தற்சார்பு வளர்ச்சிக் சழகங்கள் பல்வேறு சேவைகளை ஆற்றி வருகின்றன

இக்சழகங்கள் மேற்கொண்டுள்ள திட்டங்கள் சில வருமாறு:

★ ஒவ்வொரு கிராமத்துக்கும் நூறு நல்லின ஒருமாதக் கோழிக் குஞ்சுகள் வழங்கப்படுகின்றன:

★ கோமாரி நோயினால் கால் நடைகள் அழிந்ததால் ஒவ்வொரு கிராமத்துக்கும் பத்து மறிக்குட்டிகள் வழங்கப்படவிருக்கின்றன.

★ குளங்களைச் சிரமதானம் மூலம் ஆழப்படுத்தி வண்டல் மண்ணை அகற்றுதல். அகற்றப்படும் இம்மண்ணை நெல் வயல்களுக்கும் தென்னந் தோப்புகளுக்கும் இலவசமாக வழங்குதல்.

★ கிராமிய மக்களுக்கு உற்பத்தி முயற்சிகளுக்கு கடன் உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(இ-3)




## ஆலய பரிபாலனசபை

கந்தரோடை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் புதிய பரிபாலனசபை உறுப்பினர்கள் வருமாறு:-

தலைவர்: திரு சு. சுந்தரலிங்கம், உபதலைவர்: திரு. த. விஸ்வலிங்கம், காரியதரிசி: திரு. சு. ரவிக்குமார், உபகாரியதரிசி: திரு. சி. முத்துக்கிருஸ்ணர், தனாதிகாரி: திரு. ந. திருநாவுக்கரசு. போசகர்; பிரம்மஸ்ரீ ச. சோமஸ்கந்தக் குருக்கள்.

இத்தோடு நிருவாக அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (இ)

## வங்கி ஊழியர் சங்கம்

யாழ்ப்பாணம் ஆக 9

அண்மையில் நடைபெற்ற இலங்கை ''வங்கி ஊழியர் சங்க'' பொதுத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் இருந்து ஐவர் தெரிவாகினர்.

இலங்கை வங்கியில் இருந்து திருவாளர்கள் ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன். வே. தில்லைநாதன், எஸ், சிவபாலன், ஆகியோரும், மக்கள் வங்கியில் இருந்து ஜனாப் எம். எம். சலீல் திரு. எஸ். மகேந்திரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டார்கள். (த)

# சமூகத்தை உயர்த்துவது பண்பாட்டுக் கல்வி

## சமய வளர்ச்சி ஆய்வில் உரை

யாழ்ப்பாணம், ஆக, 9

சமூகத்தை உயர்த்துவது பண்பாட்டுக்கல்வி. சமயமும் பண்பாடும் வளர்ப்பதற்கே சேர். பொன். இராமநாதன் கல்லூரிகளையும் கோயில்களையும் கட்டினார். அவரது இலட்சியப் பண்பாட்டைப் பாதுகாத்தல் எமது கடமையாகும்.

மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற ''இராமநாதன் கல்லூரியின் சமய வளர்ச்சி'' பற்றிய ஆய்வுக் கூட்டத்தில் உரையாற்றும் போது சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டத்துக்கு மருதனாமடம் கோட்டக்கல்வி அதிகாரி திரு. க. குலசேகரன் தலைமை வகித்தார்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

''சைவ மதத்தையும் தமிழ்ப் பண்பாட்டையும் பெண்கள் கைக்கொள்ளவேண்டும் என்ற அரிய நோக்கத்துடன் மருதனாமடத்தில் இராமநாதன் கல்லூரி நிறுவப்பட்டது. அவரது இலட்சியம் வளர்ந்தோங்கப் பாடுபடுவது ஒவ்வொரு பழைய மாணவரதும் ஆசிரிய குழாத்தினதும் கடமையாகும்.

ஆசிரியப் பணி தெய்வப் பணி மாணவர்கள் இந்நாட்டின் மகத்தான சொத்து. அவர்களின் கல்வி ஒழுக்கம், கடவுள் நம்பிக்கையை வளர்ப்பது ஆசிரியரின் கடமையாகும்.

கல்வியும் பண்பாட்டு வளர்ச்சியும் இணைய வேண்டும். ஒரு பிள்ளைக்கு அவன் பிறந்த வீடு அவன் காணும் உலகம். அவன் கற்கும் பாடசாலை சிறந்ததாக இருக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ)


குழியுள் பிரேதம் இறக்கும் யந்திரம்,
'டிலைவஸ்' ஒப்பின் காஸ்கற்ஸ்,
குறஸ் காஸ்கற்ஸ் வகைகளுக்கு
நம்பகமான ஒரே இடம்:

**பிறைற் ஹவுஸ்,**

அந்திய கால சேவை
(புனித யாகப்பர் ஆலய அருகாமை)

**210, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி/3197)


## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## கேள்வி அறிவித்தல்

**மகிழங்கேணி வீடமைப்புத் திட்டத்தில் நான்கு இருக்கைகள் கொண்ட ஒரு சோடி வாளி மலசலகூடங்கள் அமைத்தல்**

சாவகச்சேரி நகரசபைக்குரிய மகிழங்கேணி வீடமைப்புத் திட்டத்தில் நான்கு இருக்கைகள் கொண்ட ஒரு சோடி வாளி மலசல கூடங்களை அமைப்பதற்கான, இரு பிரதிகளைக் கொண்ட முத்திரையிடப்பட்ட கேள்விகள் 25-08-89 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12.30 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ரூபா 100,000 வும் (ஒரு லட்சம்), அதற்கு மேற்படவும் செலவாகும் கட்டிட வேலைக்கென ஏதாவதொரு அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது உள்ளூராட்சி மன்றத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு மட்டும் கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.

விரும்பும் கேள்வியாளர்கள் மீளளிக்கப்படக் கூடிய வைப்புப் பணமாக ரூபா 250/- வும் கேள்விப் படிவக் கட்டணமாக ரூபா 50/- வும், சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டையும், பதிவுச் சான்றிதழ்களையும் 24-08-89 ஆந் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு முன்பாகச் சமர்ப்பித்துக் கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.


மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் சபையின் வேலைப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.

த. நவரத்தினராஜா
செயலாளர்,
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.

நகராட்சி மன்ற அலுவலகம்,
சாவகச்சேரி.
03-08-89.

[சி-3194]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**திரு. கனகசபை துரைச்சாமி**

(மின்னிணைப்பாளர் - பருத்தித்துறை)

ஆண்டவன் படைப்பு: 25-06-1963          ஆண்டவன் அடியில்: 10-07-1989

குடும்பத்தின் இடும்பை தன்னைக் குனிய
வைத்த கொழுகொம் பேயென் குமரா!
வடுவறியாப் பிருந்தா பிரியமுடன் ஒன்றுகி
வேறாக விட்டு நீ சென்று ஒரு திங்களடா!
தடுமாறும் நின் உடன் பிறப்பைத் தவிக்கவிட்டு
பறந்தாயோ! மறந்தாயோ! எங்கு சென்றாய்?
இடுமென அவன் நினைவால் வாடும் அன்னை
மனைவியுடன்பிறப்பை துன்பத்தில் ஆழ்த்திய வனை
வடுவற்ற வள்ளி மணாளா வரவேற்று
அவனையன் புடன்நின் பாதம் கூட்டு.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, அம்மா, உடன்பிறப்புக்கள்,
பெறுமகன், மருமக்கள், மாமா, மாமிமார்
மைத்துனன், மைத்துனிமார்,
உற்றார், உறவினர், நண்பர்கள்

உண்டுவத்தை.
அல்வாய் தெற்கு.

(1363)



## கேள்வி அறிவித்தல்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மருதனாமடம் இடவளவில் அமைந்துள்ள இராமநாதன் நுண்கலைப்பிரிவிற் சைவ சிற்றுண்டிச்சாலையை நடாத்துவதற்காக இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 1989-08-25 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் படிவங்களை இப் பல்கலைக்கழகத்தின் நலச்சேவைகள் கிளையிலிருந்து மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/- உம், மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 25/- உம் பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்.

07-08-1989

(சி/3193)


மலிவு விலையில் அறிமுகம்!
CHILTON TRIP SWITCH
மின்பொறியியலில் புகழ் மிக்க
OTTERMILL CHILTON LTD
ஸ்தாபனத்தாரின் தயாரிப்பு

**சுந்தர்சன்**

சந்தை முன்,
மானிப்பாய்.

(C/3121)

**COMPUTER COURSES**

Diploma in Basic Programming

புதிய பிரிவுகள் 12-8-89 ஆரம்பம்

MODULE - I — 8.30 A.m
MODULE - II — 10.00 A.m

சேரும்போது செலுத்த வேண்டியது: Rs 500/-

★ ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்ட பிரிவிற்குரிய மாணவர்கள் அவைவம் தத்தமக்குரிய பிரிவுகளில் உடனடியாகச் சேர்ந்து கொள்ளலாம்.

★ மல்லாகம் கிளையில் 11-8-89, 4.30 மணிக்கு புதிய பிரிவுகள் ஆரம்பமாகும். ஏற்கனவே படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் மல்லாகம் IDP காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

**IDP COMPUTER CENTRE**

342, K. K. S Road, JAFFNA.

(C/3168)


## 91 ஆம் நாள் நினைவஞ்சலி



**செல்வன் யோகசுந்தரம் ஐங்கரன் [ஜனு]**

ஆண்டவன் நமக்களிப்பு: 30 - 01 - 1972          ஆண்டவன் அடியில் 08 - 05 - 1989

கண்ணே எங்கள் கருத்தில் நிறை கற்பகமே
வெண்ணப் புதுமலராய்ப் புன்னகைக்கும் மன்னவனே
அன்னைக்குப் படிக்கவென்று
அன்று சொல்லிச் சென்றாயே!
என்னே காலன் செயல் உனை எண்ணுமற் கொன்றானே
கல்விக் களமென்று சென்றாய்
ஆனால் நீ சென்றகளம் அதுவல்ல
புல்லர்க் கிரையிடவா அல்லும் பகலும் வளர்த்தோம்?
நல்லிதயம் படைத்த செல்வா ஜனு குஞ்சு
சொல்லி மாளாதையா நெஞ்சக் குமுறலெல்லாம்
மண்ணைவிட்டுப் போனாலும்
நீ எம் மனதைவிட்டுப் போகவில்லை!
கண்ணை விட்டுப் போனாலும்
நீ எம் கருத்தை விட்டுப் போகவில்லை!
விண்ணுலகு சென்றாலும்
நீயங்கே விடிவெள்ளியாய் நிற்பாய்!
நண்ணுலகு சென்றாலும்
நீ நம் கனவில் நண்ணிடுவாய்!

சாந்தி பெறுக.

உன் நினைவால் வாடும்
அப்பா, அம்மா,
சகோதரர், உறவினர், நண்பர்கள்.

''யோகஸ்தான்''
அலுக்கை, அளவெட்டி.
09 - 08 - 1989

[1465]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விக்ஞு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்.

## A/L கலை, வர்த்தக

வகுப்புக்கள்

## 91 பிரிவு 2, ஆரம்பமாகிவிட்டன

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:-

| | |
|---|---|
| பொருளியல்:- | திரு. கலாகரன் |
| வர்த்தகம்:- | திரு. லங்கா |
| கணக்கியல்:- | திரு. வன்னிய சிங்கம் |
| அளவையியல்:- | திரு. சுப்பிரமணியம் |
| இந்து நாகரிகம்:- | திரு: சாரைசுந்தரம்பிள்ளை |
| தமிழ்:- | திரு. குழந்தை |
| புவியியல்:- | திரு. குணராஜா |
| அரசியல்:- | திரு: மஃறாப் |

● முக்கிய குறிப்பு:- கலை, வர்த்தகத்திற்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து கற்பிக்கும் ஒரே நிறுவனம்.

[சி-3259]



# NEW BECON

(சித்ராலயா முன்பாக)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 91 புதிய பிரிவு

ஆரம்பம்: 12-08-89

சனி 8.00 மணி

| | |
|---|---|
| பொருளியல்: | வரதராஜன் |
| வர்த்தகம்: | தேவா |
| கணக்கியல்: | யோகராஜா |
| அளவையியல்: | S. S. மனோகரன் |
| தமிழ்: | குழந்தை |
| இந்து நாகரிகம்: | ஜோதிஸ்வரன் |

## G. A. Q - B. A

வகுப்புகள் நடைபெறுகின்றன.

[சி-3200]



# அறிவித்தல்

## இலங்கை வங்கி
## 50 ஆம் ஆண்டு நிறைவு

வங்கியின் 50 ஆம் ஆண்டு நிறைவு விழாவின் தொடர்பில் வங்கியிலிருந்து இளைப்பாறியவர்களை கௌரவிக்கும்முகமாக வரவேற்பு உபசாரமொன்று 1989 ஆகஸ்ட் 12 ஆம்திகதிசனிக்கிழமை பி. ப. 4 30 மணிக்கு கொழும்பு 1. இல. 75, ஜனாதிபதி மாவத்தையிலிருக்கும் வங்கியின் தலைமை அலுவலகக்கட்டிடத்தில் நடைபெறவிருக்கின்றது.

நிதி இராஜாங்க அமைச்சர் கௌரவ ஹறோல்ட் ஹேரத் இவ்வைபவத்திற்கு சமுகமளித்து சிறப்பிப்பார்.

இளைப்பாறியவர்களுக்கு தனிப்பட்ட அழைப்புக் கடிதங்கள் அவர்கள் ஒய்வூதியம் பெறும் கிளைகளின் முகாமையாளர்களூடாக ஏற்கனவே தபாலிடப்பட்டுள்ளன. அவற்றை இன்னும் பெற்றுக் கொள்ளாத இளைப்பாறியவர்கள் அதற்குரிய கிளை முகாமையாளர்களுடன் அல்லது ஓய்வூதியப் பகுதி முகாமையாளரை தொலைபேசி இல. 544316, அல்லது 546790 இணைப்பு 4515 இல் தொடர்பு கொள்ளுமாறு இத்தால் கேட்கப்படுகின்றனர்.

ஓய்வூதியத் திட்டத்தில் இல்லாது வங்கிச் சேவையிலிருந்து இளைப்பாறியவர்கள்;

கொழும்பு 1, இல. 75 ஜனாதிபதி மாவத்தை, புதிய தலைமை அலுவலகம், 25 ஆம் தளம், ஓய்வூதியப் பகுதி முகாமையாளருடன் 10. 08. 1989க்கு முன் தொலைபேசியில் அல்லது எழுத்து மூலம் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

இலங்கை வங்கி,
புதிய தலைமை அலுவலகம்,
75, ஜனாதிபதி மாவத்தை,
கொழும்பு - 1

தொலைபேசி:- 544316 அல்லது 546790 இணைப்பு 4515
03 ஆகஸ்ட் 1989.


● நிக்கரகுவா அரசுக்கு எதிரான

# கொன்ரு கிளர்ச்சி அமைப்பு கலைப்பு; மத்திய அமெரிக்க மாநாட்டில் முடிவு

சன்ஜோஸ், ஆக. 8

ஐந்து மத்திய அமெரிக்க நாடுகளின் ஜனாதிபதிகள் கலந்து கொண்ட உச்சி மாநாட்டில நிக்கரகுவ அரசுக்கு எதிராகப் போராடி வரும் கொன்ரு கிளர்ச்சியாளர் அமைப்பைக் கலைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

இது சம்பந்தமான உடன்பாடு ஒன்று மாநாட்டில் காணப்பட்டதாக ஹொண்டுராஸ் ஜனாதிபதி மாநாட்டின் முடிவில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நிக்கரகுவா ஜனாதிபதி டானியல் ஒற்றேகாவும் மகிழ்ச்சியுடன் மாநாட்டில் கலந்து கொண்டார்.

இந்த உடன்பாட்டின்படி, இவ்வாண்டு டிசம்பர் மாதத்தினுள் கொன்ரு அமைப்பு கலைக்கப்பட்டுவிடும். கொன்ரு தீவிரவாதிகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை நிக்கரகுவா அரசு கைவிட்டுவிடும். இந்த நடவடிக்கைகளை சர்வதேச கமிஷன் ஒன்று மேற்பார்வையிடும்.

நிக்கரகுவா- ஹொண்டுரூஸ் எல்லையில் அமைதிப்படை ஒன்று நிறுவப்படும்.

நிக்கரகுவா திரும்பும் கொன்ரு கிளர்ச்சியாளர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்படும். விரும்பினால் கொன்ரு கிளர்ச்சியாளர் மூன்ருவது நாடு ஒன்றுக்கும் செல்லலாம்.

இப்படி உடன் பாட்டில் கூறப்பட்டுள்ளது.

நிக்கரகுவாவில் 1990 முற்பகுதியில் தேர்தல் நடத்தப்படவுள்ளது.

இத்தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடத்தப்பட்டதாகவும் உறுதி செய்யப்படும்வரை கொன்ருக் கிளர்ச்சியாளர்களுக்கு மனிதாபிமான உதவிகள் அளிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்திருக்கிறார்.

இந்த உச்சி மாநாட்டில் கௌதமாலா, எல்சல்வடோர், கோஸ்டரிக்கா, ஹொண்டுரூஸ், நிக்கரகுவா ஆகிய நாடுகள் கலந்து கொண்டன.

ஹொண்டுரூஸில் தற்சமயம் சுமார் 13 ஆயிரம் கொன்ரு கிளர்ச்சியாளர்கள் தங்கியிருக்கின்றனர்.

கொன்ரு கிளர்ச்சியாளருக்கு புகலிடம் அளித்ததாக குற்றஞ்சாட்டி சர்வதேச நீதிமன்றத்தில் ஹொண்டுரூஸுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை வாபஸ் வாங்கப்போவதாக நிக்கரகுவா மாநாட்டில் அறிவித்தது.

## கொலை உறுதி

பணயக்கைதியாக வைக்கப்பட்டிருந்த அமெரிக்க இராணுவ அதிகாரி கேர்ணல் ஹிக்கின்ஸ் கெரில்லாக்களால் தூக்கிலிடப்பட்டுவிட்டார் என்பது அமெரிக்க புலனாய்வு அதிகாரிகளின் விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## கருணாநிதிக்கு வேண்டுகோள்

தமிழக அமைச்சரவையில் கிறிஸ்தவர் ஒருவருக்கும் இடமளிக்கும்படி முதலமைச்சர் கருணாநிதிக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ ஜனநாயக முன்னணி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது. (எ)

## ராஜ்யசபாவில் ஈழப் பிரச்சினை

இலங்கைப் பிரச்சினை குறித்து புதுடில்லி ராஷ்ய சபாவில் இவ்வாரம் விவாதம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (அ-எ)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



கந்தையா தனபாலசிங்கம்

அன்னையின் மடியில்:- 16-10-1939
ஆண்டவன் அடியில்:- 26-6-1989

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டி நிற்கும்-

அன்புத் தாய், தந்தை, மனைவி, மக்கள், சகோதரர்கள், மருமக்கள், மச்சான்மார், மச்சாள்மார், உற்ருர், உறவினர்கள்.

மண்கும்பான் கிழக்கு.
அல்லைப்பிட்டி.

(1471)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்:
20 - 02 - 1904

மறைவு:
10 - 07 - 1989

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் அன்புடன் எம்மை ஆதரித்து எமக்கு வழிகாட்டிய குலவிளக்கே! எம்மையெல்லாம் ஆருத் துயரில் ஆழ்த்திவிட்டு எங்கு சென்றீர்?

உங்கள் ஆத்மா சாந்தி அடைய அராலி கரைப்பிட்டி விநாயகரை வேண்டிக் கொள்கிறோம்;

அன்னாரின் மறைவின்போது எமது துயரத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றி.

இங்ஙனம்:
மருமகள் பேரப்பிள்ளைகள்,
மைத்துனர். உறவினர்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.



நாகநாதர் பொன்னையா
(காத்தா)
[ஓய்வுபெற்ற பொலிஸ் சார்ஜன்ட்]

(11788)

# இதய அஞ்சலி



தோற்றம்:
30 - 04 - 1968

மறைவு:
08 - 08 - 1989

நா. மதனராஜன்

எமது கழகத்தின் நிர்வாக உறுப்பினரும், உள்ளம் சஞ்சிகையின் ஆசிரியர் குழு உறுப்பினருமான நா. மதனராஜன் காலமானர். அவருக்கு எமது இதய அஞ்சலிகள்.

இங்ஙனம்
அவர் பிரிவால் வாடும்:
வளர்மதி முன்னேற்றக்கழகமும்.
சனசமூக நிலையமும்.

(11787)


# பயிலுநர் தேவை

★ கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொண்டால் அது எப்போதும் கை கொடுக்கும்.

★ அச்சுக் கோர்த்தல் மற்றும் அது சம்பந்தப்பட்ட தொழிலைப் பயில்வதற்கு விரும்புகிறீர்களா?

★ ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தமிழில் திறமைச் சித்தியுடன் தேர்ச்சி அடைந்த 18 முதல் 30 வயதான ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

★ பயிற்சிக் காலத்தில் அலவன்ஸ் வழங்கப்படும்.

★ உறவினர்கள் அல்லாத இருவரிடம் இருந்து பெற்ற நற்சான்றிதழ்களுடன் நேரில்வரவும்:

நிர்வாக உத்தியோகத்தர்,

## அருண் அச்சகம்

15, இரண்டாவது ஒழுங்கை.
மின்சாரநிலைய வீதி.
யாழ்ப்பாணம்.

(சி/32 08)



# PATRICIAN INSTITUTE OF HIGHER STUDIES

59 .ST. Patrick's Road, Jaffna.

The Theory Examination for Computer Programming Students of 7 th to 13 th Batches will be held on 16 - 08 - 89 at 9.00 a. m.

Venue:- St, Patrick's College Hall,

Students of 7 th to 13 th Batches are Kindly Requested to Obtain their Index Number at the Office. Between 9.00 a. m. and 4.00 p. m.

On any working day.

— Registrar

(C/3207)



கூறுவிலை கோரல்

மின் உற்பத்தி இயந்திரம் [ஜெனரேட்டர்]

# வாடகைக்கான கூறுவிலைகள்

கிளிநொச்சி அரசாங்க வைத்தியசாலைக்கு மின் விநியோகம் செய்வதற்கு 5 K.V.A க்கும் 10 K.V.A க்கும் இடைப்பட்ட மின் உற்பத்தி இயந்திரம் (மின் ஜெனரேட்டர்) உடனடியாகத் தேவைப்படுகிறது. இது சராசரி ஒருநாளுக்கு 38 மணித்தியாலங்கள் பாவிக்கப்படும். இவ் ஜெனரேட்டர் கிளிநொச்சி அரசாங்க வைத்தியசாலையிலேயே உரிமையாளரின் பொறுப்பில் வைத்திருத்தல் வேண்டும்.

இதற்கான நாளொன்றுக்கான கூறுவிலைகளை விபரங்களுடன் கீழ்க் குறிப்பிட்டுள்ள விலாசத்துக்கு 12 08 - 89 இல் அல்லது அதற்கு முன் நேரிலோ அல்லது தபால் மூலமோ சேர்ப்பிக்கவும்.

வே. கந்தசாமி
[ஒப்பமிடப்பட்டது]
பிரதி பொது முகாமையாளர்
(வடக்கு)

தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:
மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
மாங்குளம்;

[சி-3206]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவலர்ஸ்
★தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெக்கட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konic.
Tudor Fort B/W
பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

# உதயன்

09 08 1989 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதி
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவலர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கோப்பாய் உ. அ. அ. பிரிவில்

## 1,206 குடும்பங்களுக்கு 4 ஆயிரம் ரூபா நிவாரணம்

யாழ்ப்பாணம், ஆக: 9

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஆயிரத்து 206 குடும்பங்களுக்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை உற்பத்தித் திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடைப் பணம் 4 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவிருக்கிறது.

இலங்கை வங்கியின் ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் காலை 8 மணி முதல் ஒரு மணிவரை இக் கொடுப்பனவு வழங்கப்படவிருக்கிறது.

நிவாரணம் வழங்கப்படவுள்ள கிராமசேவையாளர் பிரிவும் குடும்ப எண்ணிக்கையும் வருமாறு:-

★ பத்தைமேனி— 124
★ இடைக்காடு-290
★ அச்சுவேலி வடக்கு- 157
★ அச்சுவேலி தெற்கு- 220
★ ஆவரங்கால்-167
★ கோப்பாய் வடக்கு- 248

(ஓ-3)

## தாளையடியில் பதற்றம்

தாளையடி, ஆகஸ்ட் 9

வடமராட்சி கிழக்கில் உள்ள தாளையடிப் பகுதியில் பதற்ற நிலை காணப்படுகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அப்பகுதியில் ''பரா'' வெளிச்சக் குண்டுகள் ஏவப்பட்டன. 'ஷெல்' சத்தங்களும் கேட்டன.

இச் சம்பவத்தின்போது குடும்பப் பெண் ஒருவருக்கு காயம் ஏற்பட்டதாகத் தெரிய வருகிறது.

அதேவேளை அப்பகுதிக் கடலில் மீன் பிடித்தலுக்கு விதிக்கப்பட்ட தடையும் தொடர்ந்து உள்ளது.

(ஓ-144)

## தேசிய அரசு யோசனை: இ.தொ. காவின் நிலைப்பாடு

கொழும்பு, ஆக: 9

திட்டவட்டமான கொள்கை ஒன்று இல்லாமல் தேசிய அரசு ஒன்றை அமைப்பது பற்றி சகல அரசியல் கட்சிகளும் கூடிப் பேசுவது யதார்த்தமான செயலாக அமையாது.

இ. தொ. கா. அரசியல் குழு முன் கண்டவாறு தெரிவித்துள்ளது:

தற்போதைய நெருக்கடியைச் சமாளிக்க தேசிய அரசு ஒன்றை அமைப்பது பற்றி ஆராய அனைத்துக் கட்சி மாநாடு ஒன்றைக் கூட்டுவது பற்றி லிபரல் கட்சி வெளியிட்ட யோசனையை பரிசீலனை செய்த பின்னரே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்த முடிவைச் செய்தது. (ஓ-எ)

## பாடசாலை பகிஷ்கரிப்பு--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது.

போராட்டத்தின் மத்தியிலும் கல்வியைத் தொடர்ந்த நாம், இன்று அர்த்தமற்ற பகிஷ்கரிப்புகளாலும், வெளிநடப்புகளாலும் எமது இளம் சந்ததியை சூனியத்தை நோக்கி வழிநடாத்திச் செல்லக் காரணகர்த்தாக்களாக வேண்டுமா?

வடமராட்சியில் அரசபடைகள் பவனி வருவதற்கு வழிவிட்டுக்கொடுத்த வேளையில் உதவிப் பொருட்களையும், இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலமாக இந்திய அமைதிப் படையையும் இந்திய அரசு அனுப்பியதன் பேரில் தான் ஸ்ரீலங்கா அரசபடைகள் தமது நடவடிக்கையை வடமராட்சியோடு நிறுத்திக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

மாணவர்களின் பெயரால் விடும் அனுமதேய அறிவித்தல்களையும் வேண்டுகோள்களையும் ஏற்றுத் தொடர்ந்து பாடசாலைகளைப் பகிஷ்கரிக்கப்போகிறீர்களா? அவர்கள் விரும்பும் காட்டுமிராண்டிச் சமூக அமைப்பை உருவாக்க மாணவ சமுதாயம் உடந்தையாக இருக்கவேண்டுமா? என்பதை ஒவ்வொரு மாணவனும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அமைதிக்கும் ஜனநாயகத்திற்கும் எதிரான மனித நேயமற்ற கும்பல் பாடசாலைகளையும், பல்கலைக்கழகத்தையும், கல்வி நிறுவனங்களையும் தமது மறைமுறைவிடங்களாகப் பாவிப்பதாலும் மாணவர்களின் சீருடைகளைப் பாவித்து மாணவர்களையே தமது நடவடிக்கைகளில் ஈடுபட நிர்ப்பந்திக்கும் சந்தர்ப்பங்களிலேயே மாணவர்களும், ஆசிரியர்களும் பாதிக்கப்படுகிறார்கள் என்னும் உண்மையையும்நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இக்கும்பலின் சுயரூபங்கள் அம்பலத்திற்கு வந்தபின்பும் மாணவர்கள் தமது எதிர்கால நலனை முன்னிட்டுத் தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ள முயலுதல் வேண்டும். இத்தகைய நிலைமையில் ஒருதலைப்பட்சமாக யதார்த்த நிலைமைகளைப் பார்க்க மறுத்து, இவ்வாறு தாக்கப்படும் சம்பவங்கள் முற்போக்கானவை அல்ல என்று கூறுவோரும் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதை மாணவ சமுதாயம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

எமதுசக மாணவ மாணவிகளே! நிகழ்காலம் என்பது மாணவர்களாகிய எம்வசமே உள்ளது அதை அர்த்தமுள்ளதாகவும், எமது எதிர்காலச் சுபீட்சத்திற்கும், சுதந்திர வாழ்வுக்குமான சரியான அத்திவாரத்தையிடக் கூடியதாக மாற்றியமைக்க எமது கல்வியைத் தொடரவேண்டும்; பகிஷ்கரிப்புகளைக் கைவிட்டு இதயசுத்தியுடன் கல்விச்கூடங்களுக்குச் சென்று பெற்றோர், அதிபர் ஆசிரியர்களுக்கும் கட்டுப்பட்டு எமது கல்வியைத் தொடர்வோம். கல்விதான் மாணவ சமுதாயத்தின் அடிப்படைத் தேவை என்பதைப் புரிந்துகொண்டு செயல்படுவோம்—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

THANK YOU
ST. Jude
S. B. KUMAR.
(1370)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09-08-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மாலைதீவு சதிமுயற்சி வழக்கு

## 6 எதிரிகளுக்கும் மரணதண்டனை நிறைவேற்றும் வாய்ப்பு

மாலே, ஆக 9

மாலைதீவுச் சதி முயற்சி வழக்கில் 6 எதிரிகள் மீது விதிக்கப்பட்ட மரண தண்டனை நிறைவேற்றப்படக்கூடிய வாய்ப்பு இருப்பதாக மாலைதீவு ஜனாதிபதி மாமூன் அப்துல் கயூமுக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

38 ஆண்டுகளாக மரண தண்டனை அங்கு நிறைவேற்றப்படாவிட்டாலும் சதி முயற்சி பாரதூரமானதான குற்றமாகக் கருதப்படுவதால் இப்போது விதிக்கப்பட்ட மரணதண்டனையை மாலைதீவு அரசு நிறைவேற்ற முயலக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## இ.தொ.காவின் மாநாடு ஒத்திவைப்பு

கொழும்பு, ஆக. 9

வருகிற 17,18 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வருடாந்த மாநாடு ஒத்திவைக்கப்பட்டது.

காங்கிரஸின் அரசியல் கமிட்டி இத்தீர்மானத்தை எடுத்தது.

நாட்டின் தற்போதையசூழ்நிலையில் உறுப்பினர்கள்மாநாட்டில் கலந்து கொள்வது சிரமமான காரியம் என்றுகருதியே இம் முடிவு எடுக்கப்பட்டது.

[உ-எ]

## 268 ஆசிரியர் விவரம் வந்தது

யாழ்ப்பாணம், ஆக: 9

வெளிமாவட்டங்களில் இருந்து யாழ் மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்று வந்த 268 ஆசிரியர்களின்விவரங்கள் அடங்கிய பட்டியல் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திருமலையில் இருந்து இப் பட்டியல் வந்து சேர்ந்ததும் ஆசிரியர்களுக்கு கடிதங்கள் வழங்கப்படஇருக்கின்றன.

[ஓ-3]

### மதனராஜன்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறார்

எல்லோருடனும் அன்பாகவும், பண்பாகவும் பழகி நிர்வாகத்தினரதும் சகஊழியர்களினதும் மதிப்பைப் பெற்றவராகவும் மதனராஜன் திகழ்ந்தார்.

கொக்குவில் சம்பியன் ஒழுங்கையில் உள்ள இல்லத்திலிருந்து அவரது பூதவுடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் மயானத்திற்கு ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

### வல்வை--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாட்டுத் குழுத் தலைவர் திரு. எஸ். ஆர். ஆசீர்வாதம் வெளிக்கள இயக்குநர் திரு. சிவசுப்பிரமணியம், சர்வோதயத்தின் வடக்கு கிழக்கு மாகாண பணிப்பாளர் திரு. எம். இராஜசிங்கம் ஆகியோர் ஏனைய தொண்டர்களுடன் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று இந் நிவாரணப் பொருள்களை விநியோகித்தனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான மருந்துப் பொருள்களை விநியோகிக்கவும் சர்வோதயம் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-118)

### 2 நிபந்தனைகளை--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் குழு தீர்மானித்திருப்பதாக துணைப் பொதுச்செயலாளர் ஜனாப் எம். [illegible] கலாம் தெரிவித்தார். (உ-எ)

## வல்வையில் திங்களன்று சுற்றிவளைப்பு

வல்வெட்டித்துறைப் பகுதி நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை சுற்றிவளைக்கப்பட்டது.

சிலர் கூட்டிச் செல்லப்பட்டு பலமணிநேரம் வல்வைச்சந்தியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

அதேசமயம் கடந்த திங்கட்கிழமை மாலை புலோலி, கந்தமுருகேசனார் சிலையருகில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

அதைத் தொடர்ந்து ஷெல் தாக்குதல் இடம்பெற்றது.

## பஸ் சேவை ஆரம்பம்

தாளையடி, ஆக. 9

பருத்தித்துறையிலிருந்து வடமராட்சி கிழக்கிற்கான பஸ்சேவைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. [ஓ-144]

## அமெ. விண்கலம் நேற்று விண்ணுக்கு ஏவப்பட்டது

புளோறிடா, ஆக 9

புளோறிடாவில் உள்ள கேப்கனவரல் விண்வெளி தளத்தில் இருந்து நேற்று கொலம்பியா விண்கலம் விண்ணுக்கு ஏவப்பட்டது.

இக்கலத்தில் இருந்து உளவு பார்க்கும் செயற்கைக் கோள் ஒன்று விண்ணில் விடப்பட உள்ளது. இந்த விண்கலத்தில் 5 விண்வெளி வீரர்கள் சென்றுள்ளனர்:

'கொலம்பியா' விண்ணுக்கு ஏவப்படுவதை அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் கடைசிவரை பகிரங்கப் படுத்தாமல் இருந்தனர்.

'கொலம்பியா' விண்ணில் சஞ்சரித்துவிட்டு புளோறிடா திரும்பும். (ஓ-எ)

### விசாரணை..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் உயிரிழந்ததாகவும்—

முன்னூறுக்கும் மேற்பட்ட வீடுகள் எரிக்கப்பட்டதாகவும்—

இந்த நடவடிக்கைகளினால் பத்து அகதிகள் முகாம்கள் அமைக்கப்படவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் ஈழவர் ஜனநாயக முன்னணி தெரிவித்திருக்கிறது.

மனித உரிமைகள் மீறல் சம்பவங்களைத் தடுத்து நிறுத்த எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவ்வமைப்புக் கேட்டிருக்கிறது.

(உ)

## வெற்றிலைக்கேணி இளைஞரும் பலி

தாளையடி, ஆக: 9

வல்வெட்டித்துறைச் சம்பவங்களின் போது வடமராட்சி கிழக்கிலுள்ள வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த அருட்பிரகாசம் ரவி என்ற இளைஞரும் மரணமாகியுள்ளார்.

(ஓ-144)

## இலங்கைக்கு இசைவாக--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாரத்திற்கு மூன்று கப்பல்களில் 1,500 தொடக்கம் 1,600 அமைதிப்படைத் துருப்புக்களைத் திருப்பி அழைப்பது என்ற அடிப்படையில் பூரணமாக துருப்புக்களை விலக்க ஏற்பாடுகளைச் செய்வதற்கு, ஆயத்தக்கால மூன்று வாரங்கள் உட்பட 28 முதல் 30 வாரங்கள் பிடிக்கும் என்று இந்தியா தெரிவித்தது.

இதனால் படைகளை முற்றாக விலக்கிக்கொள்வதை அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் அளவிலேயே பூர்த்தி செய்ய முடியும் என்றும் இந்தியா தெரிவித்தது.

### யுத்த நிறுத்தத்துக்கு நிபந்தனை

விடுதலைப் புலிகள் இயக்கம் யுத்தநிறுத்தம் ஒன்றுக்கு முன்வந்திருப்பதை அனுசரித்து அதற்குஏற்ப இந்தியா நடந்துகொள்ளவேண்டும் என்பது இந்திய அமைதிப்படை தாக்குதல்களை நிறுத்துவது பற்றிய இலங்கையின் நிலைப்பாடாகும்.

ஆனால் இந்தியாவோ, குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைய 15 நாட்களுக்கு தாக்குதல்களை நிறுத்த இணக்கம் தெரிவித்துள்ளது:

வடக்கு - கிழக்குக்கான சமாதானப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் பங்கெடுத்துக்கொண்டதும் இந்த யுத்த நிறுத்தக் காலப் பகுதி நீடிக்கப்படும் என்று இந்தியா கூறியிருக்கிறது.

### ஒப்பந்த அமுல்

1987 ஜூலை 29 ஆம் திகதி செய்து கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை மறு பரிசீலனை செய்வது குறித்தும் இலங்கைக் குழுவினர் புதுடில்லிப் பேச்சுக்களின் போது தெரிவித்தனர்.

ஒப்பந்தத்தின் அமுலாக்கத்திற்கும் அமைதிப்படை விலம்லுக்கும் எவ்வித தொடர்புக இல்லை. எவ்வாறெனினும் உடன்படிக்கையை அமுல் நடத்த [illegible] நடவடிக்கைகள் பற்றியும் மாகாண [illegible] பொலிஸ் படை [illegible] ஒன்றை நிறுவ எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்தும் மாகாண சபைகள் பயனுள்ள முறையில் இயங்குவதற்கு செய்யப்பட்டுள்ள வசதிகள் பற்றியும் இலங்கைக் குழு புதுடில்லியில் விவரித்தது.

இதுதொடர்பாக இந்திய இலங்கைக் குழுவின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டது.

### வடக்கு - கிழக்கில் பாதுகாப்பு

வடக்கு - கிழக்கில் வாழும் சகல பிரிவினரின் பாதுகாப்புக் குறித்தும் இலங்கை ஒரு பிரேரணையைச் சமர்ப்பித்தது.

அதில் வடக்கு - கிழக்குக்கான பாதுகாப்பின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதாக இலங்கை கூறியிருந்தது.

அமைதிப்படை விலகிக்கொள்ளும் காலப் பகுதிக்குள் பாதுகாப்பு நடவடிக்கை பற்றி மீளாய்வு செய்வதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர், இலங்கை இராணுவத் தளபதி, பொலீஸ் மா அதிபர், இந்திய அமைதிப்படையின் பிரதம தளபதி ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றை நியமிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இந்தியத் தரப்பில் இது பற்றி மேலும் ஒரு விடயம் தரப்பட்டது:

### பந்தோபஸ்து மதிப்பீடு

அமைதிப்படை விலகும் கால எல்லைக்குள் வடக்கு—கிழக்கு மாகாணத்தின் சகல மக்களின் பாதுகாப்பு ஒரு பந்தோபஸ்து மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதே அதுவாகும்.

இந்தியத் தரப்பில் தரப்பட்ட நிலைப்பாட்டின் படி, ஆலோசனை, ஒன்றிணைப்பு வேலைகளுக்கு ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும் என்றும் அதில் வடக்கு - கிழக்கு முதலமைச்சர், இலங்கை இராணுவ தளபதி, பொலீஸ் மா அதிபர், அமைதிப்படையின் பிரதம தளபதி ஆகியோரும் அங்கம் வகிக்கவேண்டும் என்பதாகும்; (அ-எ)

## மனித உரிமை மீறலுக்கு சகல தரப்புமே பொறுப்பு!

கொழும்பு, ஆக. 9

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல் பற்றி 'ஏசியா வாட்ச்' (asia watch) என்ற மனித உரிமை ஸ்தாபனம் தனது அறிக்கை ஒன்றில் பிரஸ்தாபித்திருக்கிறது:

அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளுக்கு சகல தரப்பினருமே பொறுப்பு.

அரசின் மனித உரிமை மீறல்கள் அவசரகாலச் சட்ட விதிகள் மற்றும் தண்டனை தவிர்ப்புச் சட்டம் ஆகியவற்றின் மூலம் மூடி மறைக்கப்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. (உ-எ)

## 700 ஜவான்கள் தாயகம் திரும்பினர்

கொழும்பு, ஆக 9

இந்திய அமைதிப்படையைச் சேர்ந்த சுமார் 700 ஜவான்கள் நேற்று திருகோணமலைத் துறைமுகத்திலிருந்து தாயகம் திரும்பினர்.

அமைதிப் படையின் பிரதம தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத் அவர்களை வழியனுப்பிவைத்தார். (ஓ-எ)

## இடம் பெயர்வு

தாளையடி, ஆக. 9

வடமராட்சி சம்பவங்களை அடுத்து அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பலர் வடமராட்சி கிழக்கிலுள்ள இடங்களுக்கு இடம்பெயர்ந்துவந்துள்ளார்கள்.

[ஓ-144]

## தென்மராட்சியில் ஊரடங்கு

யாழ்ப்பாணம், ஆக. 9

தென்மராட்சிப்பகுதியில் மாலை ஆறு மணிமுதல் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு தினமும் அமுல்செய்யப்படுகிறது.

# இதய அஞ்சலிகள்

நல்லவனாய், வல்லவனாய் வாழ்ந்து
இளம் வயதில் இன்னுயிர் நீத்த

'உதயன்' நிறுவன ஊழியரும்
கொக்குவில் சம்பியன் ஒழுங்கையைச் சேர்ந்தவருமான

## நாகராசா மதனராஜனுக்கு

ஷப்ரு நிறுவன நிர்வாகிகள், ஊழியர்களின்
இதய அஞ்சலிகள்.

# மரண அறிவித்தல்கள்

## நாகராசா மதனராஜன் (உதயன்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகராசா மதனராஜன் (உதயன்) காலமானார்.

அன்னார் நாகராசா, காலஞ்சென்ற கேதாரஈஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும், மதிவதனி, நந்தினி, சசிகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 3-00 மணியளவில் நடைபெற்று, இறுதிக்கிரியைகள் கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

சம்பியன் லேன்,
கொக்குவில்.

து. நாகராசா
(C/3209)

## திரு. கந்தையா தியாகராஜா

யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்திருந்த கோணேஸ்வரி கபேயின் முன்னைநாள் உரிமையாளரும், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், கல்லியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தையா தியாகராஜா காலமாகிவிட்டார்.

இவர் நாகம்மாவின் அன்புக் கணவரும், செல்லக்கண்டுவின் அன்புச் சகோதரரும், பாலசிங்கம், கனகேஸ்வரி, அழகேஸ்வரி, கனகசிங்கம் (பிரான்ஸ்), பரமகுலசிங்கம், காலஞ்சென்றவர்களான கதிர்காமசிங்கம், வேல்முருகசிங்கம், குமாரசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கனகரத்தினம், கனகலிங்கம் (முகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், வவுனியா), ஜெயந்திமலர், லீலாவதி, சுவர்ணலதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரபாலினி (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), பிரபாகரன் (யாழ். மத்திய கல்லூரி), ஹேமானந் (பிரான்ஸ்), ஹேமயாழினி (பிரான்ஸ்), பிரியதர்சினி (பிரான்ஸ்), ஹேமமாலினி, ஹேமலதா, பத்மரூபன், ஹேமசுபா, சர்மினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 17, ஆடியபாதம் றோட் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக 09-08-1989 இன்று புதன்கிழமை காலை 10-00 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

17, ஆடியபாதம் றோட்,
நல்லூர். (1472)

க. கனகரத்தினம்
(மருமகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org